# மரித்தோரின் ஆவிகளினால் மனிதர்களுக்கு நன்மையளிக்க முடியுமா?

**எம்.எஸ்.வசந்தகுமார்**

கிறிஸ்தவர்கள் மத்தியில் நீண்டகாலமாக இருந்து வரும் சர்ச்சைக்குரிய விடயங்களில் ஒன்று, மரித்தவர்களின் ஆவிகளைப் பற்றியதாகும். மரித்த உறவினர்கள், மூதாதையர்களின் ஆவிகளினால் உயிரோடிருக்கும் மனிதர்களுக்கு ஆலோசனைகளும், ஆவிக்குரிய வழிநடத்துதல்களும் கொடுக்க முடியுமா? என்பது பொதுவாக கிறிஸ்தவர்கள் மத்தியில் இருக்கும் ஒரு சர்ச்சைக்குரிய கேள்வியாகவே உள்ளது. சில கிறிஸ்தவர்கள், தாங்கள் வாழும் பிரதேசங்களிலுள்ள பிறமதங்களைச் சேர்ந்தவர்களின் நம்பிக்கைகளின் செல்வாக்கிற்கு உட்பட்டவர்களாக, மரித்தோரின் ஆவிகள் தங்களோடு தொடர்பு கொள்வதாகவும், தங்களுக்கு மரித்தோரின் ஆவிகளின் மூலம் ஆலோசனைகளும் வழிநடத்துதல்களும் கிடைப்பதாகவும் கூறிவருகின்றனர். மரித்தோரின் ஆவிகள் தங்களுடைய வாழ்வில் அற்புதங்கள் செய்வதாகவும் சிலர் தெரிவித்துள்ளனர். கிறிஸ்தவர்களின் மத்தியில், மரித்த பரிசுத்தவான்கள் காட்சியளிப்பதுபற்றியும், அவர்கள் உயிரோடிருப்பவர்களுக்குப் பலதரப்பட்ட ஆசீர்வாதங்களை அருள்வதைப்பற்றியும் பலவிதமான பாரம்பரியக் கதைகளும் உள்ளன. எனவே, மரித்த மனிதர்களின் ஆவிகளினால் மறுபடியுமாக இவ்வுலகத்திற்கு வரமுடியுமா? என்பதற்கும், அவைகளினால் உயிரோடிருப்பவர்களுக்கு நன்மையளிக்க முடியுமா? என்பதற்கும் வேதாகமத்தில் ஏதாவது ஆதாரங்கள் இருக்கின்றதா என்று ஆராய்ந்து பார்க்க வேண்டியது அவசியமாக உள்ளது.[1]

மரித்தவர்களின் ஆவிகளினால் மனிதர்களோடு தொடர்பு கொண்டு, அவர்களுக்கு ஆலோசனையளிக்க முடியும் என்பதற்கு ஆதாரமாகச் சுட்டிக்காட்டப்படும் வேதப்பகுதி 1சாமுவேல் 28:3-25 ஆகும்.[2] இப்பகுதியில் இஸ்ரவேல் ராட்சியத்தின் முதலாவது அரசனான சவுல் என்பவனோடு,[3] மரித்துப்போன தீர்க்கதரிசியாகிய சாமுவேலின் ஆவி பேசியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால் மரித்தோரின் ஆவிகளினால் உயிரோடிருக்கும் மனிதருக்கு ஆவிக்குரிய ஆலோசனையும் வழிநடத்துதலும் கொடுக்க முடியும் என்று சிலர் நம்புகின்றனர். ஆனால், இச்சம்பவத்தில், உண்மையிலேயே மரித்துப்போன சாமுவேலின் ஆவி சவுலுடன் பேசியதா? அல்லது, மக்களை

---

[1] கிறிஸ்தவ உபதேசங்கள் நம்பிக்கைகள் அனைத்திற்கும் ஆதாரமாக இருப்பது தேவனுடைய வார்த்தையான பரிசுத்த வேதாகமமே. எனவே, வேதாகமத்திற்கு முரணான எந்த ஒரு உபதேசமும் நம்பகமானதும் சரியானதும் அல்ல.

[2] இவ்வசனங்கள், இதற்கும் முன்னும் பின்னும் உள்ள வசனங்களுடன் தொடர்பற்ற விதத்தில், தனியான ஒரு பகுதியாகவும், உள்ளது. உண்மையில் 28:2ன் தொடர்ச்சி 29:1இலேயே உள்ளது. இதனால், இப்பகுதி ஆரம்பத்தில் 30ம் அதிகாரத்திற்குப் பின்பே இருந்திருக்க வேண்டும் என்றும், பிற்காலத்தில் இப்புத்தகத்தின் தொகுப்பாளர் இறையியல் காரணங்களுக்காக இப்பகுதியை 28ம் அதிகாரத்திற்கு இடையில் புகுதித்தியுள்ளார் என்றும் வேத ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர் (G.Robinson, *1&2 Samuel: International Theological Commentary*, p. 141). குறிப்பிட்ட ஒரு நோக்கத்திற்காகவே, இச்சம்பவம் இவ்விடத்தில் எழுதப்பட்டுள்ளது என்று சிலர் கருதுகின்றனர் (R.W.Klein, *1 Samuel: Word Biblical Commentary Volume 10*, p. 267).

[3] சவுல் கி.மு. முதல் கி.மு வரை இஸ்ரவேலின் அரசனாக இருந்தான்


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London, 2006.

வஞ்சிக்கிற பிசாசின் ஆவி சாமுவேலைப்போல தோற்றமளித்து சவுலோடு பேசியதா? என்பதை முதலில் நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

வேதாகமத்திலுள்ள சம்பவங்களை, வேதாகம உபதேசங்களை அடிப்படையாகக் கொண்டே வியாக்கியானம் செய்ய வேண்டும் என்பதை நாம் மறக்கலாகாது. பிசாசு ஒளியின் தூதனுடைய வேஷம் தரித்து வருவதாக வேதாகமம் கூறுவதனால் (2கொரி.11:14), அவனால் மரித்த மனிதர்களைப் போலத் தோற்றமளிக்கவும், மரித்தவர்களின் ஆவிகள் பேசுவதுபோல பேசவும் முடியும். எனவே, சவுலோடு பேசியது மரித்துப் போன தீர்க்கதரிசினுடைய ஆவி அல்ல. பிசாசின் ஆவியே சாமுவேலின் தோற்றத்தில் வந்து, சவுலோடு பேசியுள்ளது.[4] “அஞ்சனம் பார்க்கும்”[5] பெண்ணின் செயலினால் வந்த பிசாசின் ஆவி சாமுவேலைப்போல தோற்றமளித்தமையால், சவுலும் அப்பெண்ணும் சாமுவேலின் ஆவியே வந்துள்ளதாக எண்ணினார்கள். சவுல் ஆவியுடன் பேசும்போது சாமுவேலிடம் பேசுவதாகவே நினைத்துப் பேசினான். சவுலோடு சென்ற இருவருக்கும் (1சாமு.28:8), அவன் சாமுவேலோடு பேசுவதாகவே தென்பட்டது. இதனாலேயே 1சாமுவேல் 28ம் அதிகாரத்தில் ஆவி பேசும்போது சாமுவேல் பேசுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.[6]

1சாமுவேல் 28ம் அதிகாரத்தை மேலோட்டமாக வாசிக்கும்போது, மரித்துப் போன சாமுவேலே சவுலோடு பேசியதாக நமக்குத் தென்பட்டாலும், சவுலோடு பேசியது சாமுவேல் அல்ல என்பதற்குப் பல ஆதாரங்கள் உள்ளன. மரணத்தின் பின்னர் மோசேயும் எலியாவும் இவ்வுலகத்திற்கு வந்துள்ளதை மத்.17:3, லூக்.9:30-31ல் நாம் காணலாம். ஆனால் இவர்கள் மகிமையின் சரீரத்துடன் மறுரூபமலையில் இயேசு கிறிஸ்துவோடு உரையாடுகிறவர்களாகவே காணப்பட்டனர். ஆனால், அஞ்சனம் பார்க்கும் பெண் கொண்டுவந்த ஆவி, சாமுவேல் இவ்வுலகத்தில் வாழ்ந்தபோது இருந்த தோற்றத்தில், “சால்வையைப் போர்த்திக் கொண்டிருக்கிற ஒரு முதிர்ந்த வயதான மனிதராகவே” தென்பட்டது (1சாமு.28:14). எனவே, இது பரலோகத்திலிருந்து

---

[4] M.F.Unger, *Biblical Demonology*, p. 150; M.Henry, *Commentary on the Holy Bible, Volume 2*, p. 767; A.Heidel, *The Gilgamesh Epic and Old Testament Parallels*, p. 189.

[5] “அஞ்சனம் பார்த்தல்” என்பதற்கு மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள பதம், “உயிரோடிருப்பவரின் தேவைக்காக மரித்தவர்களிடம் ஆலோசனை கேட்பதைக் குறிக்கும்” (R.F.Youngblood, *1,2Samuel: The Expositors Bible Commentary Volume 3*, p. 778). இஸ்ரவேல் மக்கள் மத்தியலும் அண்டை நாடுகளிலும் காணப்பட்ட இத்தகைய பழக்கத்தைப் பற்றிய விபரங்களுக்குப் பின்வரும் நூல்களைப் பார்க்கவும்: T.J.Lewis, *Cults of the Dead in Ancient Israel and Ugarit*. Atlanta: Scholars Press, 1989; E.M.Bloch-Smith, “The Cult of the Dead in Judah: Interpreting the Material Remains” in *Journal of Biblical Literature*. 111 (1992), pp. 213-214.

[6] சில வேத ஆராய்ச்சியாளர்கள் இச்சம்பவத்தை, அஞ்சனம் பார்க்கும் பெண்ணுடைய அனுபவமாக மட்டுமே கருதுகின்றனர். அதாவது, அஞ்சனம் பார்க்கும் பெண்ணுக்கு எற்பட்ட உளவியல் தாக்கம் காரணமாக, சாமுவேல் தோன்றி தன்னோடு பேசுவதாக உளவியல் ரீதியாக அவள் உணர்ந்ததாக இவர்கள் கூறுகின்றனர் (P.Schaff, ed., *The Books of Samuel: Lange’s Commentary*, p. 336). ஆனால், அஞ்சனம் பார்க்கும் பெண் மட்டும் அல்ல சவுலும் சாமுவேலோடு பேசுவதனால், அப் பெண்ணுக்கு ஏற்பட்ட உளவியல் ரீதியான அனுபவமாக இதனைக் கருதமுடியாது. மேலும், மரித்தவரின் ஆவியைக் கண்டபோது அப்பெண் நடந்துகொண்ட முறையும், இது உளவியல் ரீதியான அனுபவம் அல்ல என்பதற்கான ஆதாரமாக உள்ளது. இதைப்போலவே, அஞ்சனம் பார்க்கும் பெண் உண்மையில் சாமுவேலின் ஆவியைக் காணவில்லை என்றும், அவள் சவுலை ஏமாற்றும் நோக்கத்துடன் சாமுவேலின் ஆவி வந்துள்ளதாகக் கூறினாள் என்றும் கூறுபவர்களின் தர்க்கங்களும் (J.Orr, “Witch of Endor” in *The International Standard Bible Encyclopaedia Volume 2*, p. 944) ஏற்றுக்கொள்ளக்கூடியவைகளாக இல்லை.


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London, 2006.

வந்த சாமுவேல் அல்ல. சாமுவேல் பூமியில் வாழ்ந்தபோது எத்தகைய தோற்றத்தில் இருந்தாரோ, அத்தகைய தோற்றத்தில் பிசாசு தோன்றியுள்ளான். மேலும், அஞ்சனம் பார்க்கும் பென் "தேவர்கள் பூமிக்குள்ளிருந்து ஏறிவருவதைக்" காண்பதாகவே கூறினாள். மரித்தோரின் ஆவிகளை வேதம் தேவர்கள் என்று அழைப்பதில்லை. அஞ்சனம் பாக்கும் செயல் பிசாசின் ஆவிகளினால் செய்யப்படுவதனால், அப்பெண், பிசாசுகளைத் தேவர்கள் என்று குறிப்பிட்டுள்ளாள். மேலும், அப்பெண் குறிப்பிட்டுள்ள விதமாக மரித்தோரின் ஆவிகள் பூமிக்குள் இருப்பதில்லை. அவை தேவனிடம் செல்வதாகவே வேதாகமம் கூறுகிறது (பிர.12:7, 3:21). எனவே, தேவனிடம் சென்ற சாமுவேலின் ஆவியை அஞ்சனம் பார்க்கும் பெண் "பூமிக்குள் இருந்து வருவதாகக்" கண்டிருக்க முடியாது.[7]

"தேவன் இந்த ஒரு சந்தர்ப்பத்தில் மட்டும் மரித்த சாமுவேலின் ஆவியை சவுலோடு பேசுவதற்காகக் கொண்டு வந்தார்"[8] என்று சில கிறிஸ்தவர்கள் கூறுகின்றனர். ஆனால், தேவன் இவ்வாறு செய்தார் என்று வேதத்தில் குறிப்பிடப்படவில்லை. மேலும், இது வேதாகம உபதேசத்தையே முரண்படுத்தும் விளக்கமாகவே உள்ளது. தேவ வழிநடத்துதலைப் பெறுவதற்காக மரித்தவர்களிடம் விசாரிக்கும் முறையைத் தேவன் வன்மையாகக் கண்டித்துள்ளதோடு, இத்தகைய பழக்கத்தை முழுமையாகத் தடை செய்துள்ளார். "அஞ்சனம் பார்க்கிறவர்களை நாட வேண்டாம்" (லேவி.19:31) என்றும், "செத்தவர்களிடத்தில் குறிகேட்கிறவர்கள் உங்களிடத்தில் இருக்கவேண்டாம்" (உபா. 18:11) என்றும் கட்டளையிட்ட தேவன், இத்தகைய செயலுக்குத் தாம் எதிர்த்து நிற்பதாகத் தெரிவித்துள்ளதோடு (லேவி.20:6), இதில் ஈடுபடுகிறவர்களுக்கு மரண தண்டனை கொடுக்கப்பட வேண்டும் என்றும் அறிவித்துள்ளார் (லேவி.19:27, யாத். 22:18). உண்மையில், அஞ்சனம் பார்ப்பதும் மரித்தவர்களிடத்தில் குறி கேட்பதும் தேவன் தடைசெய்துள்ள பாவமாகவே வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது (2ராஜா.21:6, 2நாளா.33:6). எனவே, தேவன் தாம் வெறுக்கும் பாவமான ஒரு செயலின் மூலம், சாமுவேலின் ஆவியைச் சவுலோடு பேச வைத்தார் என்று தர்க்கிப்பது, தேவனே தாம் வெறுக்கும் பாவமான காரியத்தைச் செய்துள்ளதாகக் கூறுவதாகவே உள்ளது. தாம் தடை செய்த காரியத்தைத் தாமே செய்யும் அளவுக்குத் தேவன் முரண்பாடானவர் அல்ல என்பதை நாம் மறக்கலாகாது. எனினும், தேவன் சகலத்தையும் தம்முடைய கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருப்பதனால், சவுலுக்கு என்ன செய்தி அச்சமயம்

---

[7] சில வேத ஆராய்ச்சியாளர்கள் இச்சம்பவத்தை ஆதாரமாகக் கொண்டு பழைய ஏற்பாட்டுக்காலத்தில் மரித்தவர்களின் ஆவிகள் பூமிக்குள் செல்வதாக நம்பினார்கள் என்று கூறுகின்றனர் (G.Robinson, *1&2 Samuel: International Theological Commentary*, 143; R.P.Gordon, *1& 11 Samuel: Library of Biblical Interpretation*, p. 195). ஆனால், பிரசங்கி 3:21, 12:7 போன்ற வசனங்கள் இதை முரண்படுத்தகின்றன.

[8] E.H.Merrill, *1Samuel: The Bible Knowledge Commentary Old Testament*, p. 454; G.J.Keddie, *Dawn of a Kingdom: The Message of 1Samuel*, p. 272; J.J.Davis & J.C.Whitcomb, *Israel From Conquest to Exile*, p. 256; ஆதிசபைப்பிதாக்களில் ஒரிகன் என்பவர், மத்தியஸ்தராக இருக்கும் இயேசுகிறிஸ்துவின் செயலாக இச்சம்பவத்தை விளக்கியுள்ளார் (P.Cox, "Origen and the Witch of Endor: Toward an Iconoclastic Typology" in *Anglican Theological Review*. 61, 2 (1984), pp. 139-144)


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London, 2006.

கொடுக்கப்படவேண்டுமோ, அதைமட்டுமே பேசுவதற்குப் பிசாசுக்கு அனுமதி கொடுத்தார்.[9]

1சாமுவேல் 28:6ல், “சவுல் கர்த்தரிடத்தில் விசாரிக்கும் போது கர்த்தர் அவனுக்குச் சொப்பனங்களினாலாவது ஊரீமினாலாவது தீர்க்கதரிசிகளினாலாவது மறுஉத்தரவு அருளவில்லை” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.[10] இவ்வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ளபடி “சொப்பனங்கள்” “ஊரீம்” “தீர்க்கதரிசிகள்” என்பனவே தேவன் அக்காலத்தில் மனிதர்களிடம் பேசுவதற்காக உபயோகித்து வந்த ஊடகங்களாகும்.[11] இவற்றினூடாகச் சவுலோடு பேச மறுத்த தேவன், அஞ்சனம் பார்க்கிற ஒரு பெண்ணுடைய மந்திரச் செயலின் மூலம் மரித்துப்போன சாமுவேலை எழும்பிவரச் செய்து அவனோடு பேசினார் என்று கூறுவது அர்த்தமற்றது. உண்மையிலேயே தேவன் சவுலோடு பேச விரும்பியிருந்தால், அவன் அவரிடத்தில் விசாரித்தபோது, அவர் அவனுக்கு பதிலளித்திருப்பார். அச்சமயத்தில் மௌனமாயிருந்த தேவன், தாம் தடைசெய்துள்ள அஞ்சனம் பார்க்கும் செயலின் மூலம் சவுலோடு பேசினார் என்று கூறமுடியாது. மேலும், ஆரம்பத்தில் தேவனுடைய கட்டளையின்படி, அஞ்சனம் பார்க்கிற சூனியக்காரர்களையெல்லாம் கொன்றுபோட்ட சவுல் (1சாமு.28:9), இப்பொழுது அஞ்சனம் பார்க்கும் ஒரு பெண்ணிடம் சென்றது, தான் தேவனுடைய கட்டளைக்கு விரோதமான ஒரு காரியத்தைச் செய்கின்றேன் என்பதை அறிந்து செய்த ஒரு பாவமான செயலாகவே உள்ளது.[12] எனவே, இத்தகைய காரியத்தில் தேவனுடைய செயல் இருப்பதாகக் கூறமுடியாது.

சவுலினுடைய மரணத்திற்கான முக்கியமான காரணங்களில் ஒன்றாக அவன் அஞ்சனம் பார்த்த செயல் இருப்பதை 1நாளாகமம் 10:13-14 அறியத்தருகின்றது. “அவன் கர்த்தருடைய வார்த்தையைக் கைக்கொள்ளாமலும், கர்த்தரைத் தேடாமலும், அஞ்சனம் பார்க்கிறவர்களிடத்திற்குச் சென்றதினால், கர்த்தர் அவனைக் கொன்றார்”

---

[9] இஸ்ரவேலைச் சபிக்கச் சென்ற பிலேயாமைத் தேவன் அவன் விருப்பத்தின்படி பேசவிடாதிருந்ததைப் போன்றே இங்கும் செய்துள்ளார். மேலும், தேவனுடைய அனுமதிக்கும் அப்பால் பிசாசினால் எதுவும் செய்யமுடியாது என்பதை யோபுவின் சரிதையும் அறியத்துருகின்றது (யோபு.1:12).

[10] தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல், தன்னுடைய விருப்பத்தின்படியே செயல்பட்டு வந்த சவுலைத் தேவன் கடைசியில் கைவிட்டுவிட்டார். உண்மையில் நீதிமொழிகள் 1:22-32ன்படியே சவுலின் வாழ்வு இருந்துள்ளது (W.W.Wiersbe, *Be Successful: An Old testament Study – 1Samuel*, p. 156)

[11] தேவன் சொப்பனங்களின் மூலம் பேசும்போது மனிதர்களுக்குக் கனவில் தரிசனங்களைக் காண்பிப்பது வழக்கம். மக்கள் நெருக்கடியான சூழ்நிலைகளில் தேவனுடைய சித்தத்தை அறிந்துகொள்வதற்காக ஆசாரியர்களினால் உபயொகிக்கப்பட்ட பெறுமதியான கற்களே ஊரீம் தும்மீம் என்று அழைக்கப்பட்டன (யாத்.28:30, லேவி.8:8, எண்.27:21, உபா.33:8, 1சாமு.28:6, எஸ்.2:63, நெகே.7:65). யூதர்கள் பாபிலோனியச் சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தபின்னர் இவற்றின் உபயோகம் இல்லாமற் போய் விட்டது. தீர்க்கதரிசிகள் தேவனுடைய வாயாகச் செயற்பட்டு அவர் அருளும் வார்த்தைகளை மக்களுக்கு அறிவித்து வந்தனர்.

[12] இதைப்போலவே, அஞ்சனம் பார்க்கும் பெண் ஆரம்பத்தில் சவுலின் கோரிக்கைக்கு இணங்காதபோது, அவளுக்கு எந்தத் தீங்கும் நேராது என்று சவுல் கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு அவர்மேல் ஆணையிட்டதும் (1சாமு.28:10), தேவனுக்கு எதிரான ஒரு செயலாகவே உள்ளது. தேவனுடைய கட்டளைக்கு எதிரான ஒரு காரியத்தைச் செய்யும் சவுல் அதற்காகக் கர்த்தருடைய நாமத்தை உபயோகிப்பது, அவரை நிந்திப்பதாகவே உள்ளது. இதனால், தேவன் அவனுக்கு சார்பாகச் செயற்படாமல், எதிராகவே இருந்தார். மேலும், ஆரம்பத்தில் சாமுவேலின் அறிவுறுத்தலின்படி, நாட்டிலிருக்கும் அஞ்சனம் பார்க்கும் மனிதர்களையெல்லாம் அழித்துப்போட்ட சவுல், இப்பொழுது அஞ்சனத்தின் மூலம் சாமுவேலின் ஆவியைக் கொண்டுவரும்படி கேட்டது சாமுவேலையும் நிந்திக்கும் செயலாக உள்ளது (R.D.Bergen, *1,2 Samuel: The New American Commentary*, p. 266).


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London, 2006.

என்று 1நாளாகமம் 10:13-14ல் குறிப்பிடப்பட்டுள்ளது.[13] நியாயப்பிரமாணத்தின்படி, அஞ்சனம் பார்ப்பது மரண தண்டனைக்குரிய பாவமாக உள்ளது (லேவி.20:6). இதனால், அஞ்சனம் பார்க்கச் சென்று 24 மணித்தியாலங்களுக்குள் சவுல் மரணமடைந்தான். எனவே, அஞ்சனம் பார்க்கும் பெண்ணின் செயலின் ஊடாக தேவன் சாமுவேலின் ஆவியைக் கொண்டுவந்திருந்தால், சவுல் அஞ்சனம் பார்க்கச் சென்றதற்காகத் தேவன் அவனைக் கொல்வது அர்த்தமற்ற செயலாக இருப்பது மட்டுமல்ல, இது தேவன் முரண்பாடுடையவர் என்பதற்கான ஆதாரமாகவும் இருக்கும். மக்கள் அஞ்சனம் பார்ப்பதையும் மரித்தவர்களின் ஆவிகளுடன் தொடர்பு கொள்ள முற்படுவதையும் தேவன் பாவமான செயல்களாகக் கருதியதினாலேயே, இத்தகைய காரியத்தைச் செய்த சவுலை அவர் தண்டித்துள்ளார். எனவே, அஞ்சனம் பார்க்கும் செயலுக்கு உதவும் விதத்தில் தேவன் மரித்துப்போன சாமுவேலின் ஆவியைக் கொண்டு வந்தார் என்று கூறமுடியாது.

இயேசுகிறிஸ்து மறுபடியும் வரும்போதே மரித்தவர்களை நாம் சந்திக்கலாம் என்று வேதாகமம் அறியத்தருவதனால் (1தெச.4:13-17), அதற்கும் முன்பு மரித்தவர்கள் மக்களுக்குத் தரிசனம் கொடுத்துள்ளார்கள் என்று கூறமுடியாது. மரித்த மோசேயும் எலியாவும் மறுரூபமலையில் தரிசனம் கொடுத்தது உண்மை என்றாலும், இது பரலோகத்திலிருக்கும் பக்தர்களிருவரை இயேசுகிறிஸ்து சந்தித்த சிறப்பான ஒரு சம்பவமாக உள்ளதே தவிர, மரித்த இவர்களுடைய ஆவிகள் உலகிலிருக்கும் மனிதர்களுடன் தொடர்பு கொண்ட செயலாக இல்லை. உண்மையில், இயேசு கிறிஸ்துவைத் தனிப்படட ரீதியாக அறிந்தவர்கள் மரிக்கும்போது, அவர்களுடைய ஆவி இயேசுகிறிஸ்துவிடமே செல்கின்றது. இதனால்தான் மரணத்தினாலும் தன்னைக் கிறிஸ்துவிடமிருந்து பிரிக்க முடியாது என்பதை அறிந்திருந்த பவுல் (ரோ.8:36-39), தேகத்தைவிட்டுப் பிரிந்து கிறிஸ்துவுடனிருக்க ஆசைப்பட்டார் (பிலி.1:23, 2கொரி.5:8). இயேசுகிறிஸ்து மறுபடியும் வரும்போது, அவருக்குள் மரித்தவர்களையும் அவர் தம்மோடு கொண்டு வருவார் என்று வேதம் கூறுவதனால் (1தெச.4:14), அவருக்குள்

---

[13] 1நாளாகமம் 10:13ல் சவுல் கர்த்தரைத் தேடவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளபோதிலும், 1சாமுவேல் புத்தகத்தில் இதை முரண்படுத்தும் விதத்தில் அவன் கர்த்தரைத் தேடியதைப்பற்றி பல தடவைகள் குறிப்பிடப்பட்டுள்ளது (1சாமு.14:37, 15:31, 28:6). சாமுவேலின் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது போல, சவுல் ஒருசில தடவைகள் தேவனைத் தேடியபோதிலும், அவன் நெருக்கடியான சூழ்நிலைகளிலேயே தேவனைத் தேடுகிறவனாக இருந்துள்ளான். மேலும், சாமுவேலின் புத்தகத்திலும், தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியாதவனாகவும், தேவனுடைய வார்த்தையை முரண்படுத்துகிற விதத்தில் செயற் படுகிறவனாகவும் சவுல் பல சந்தர்ப்பங்களில் இருந்துள்ளது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது (1சாமு.13:1-23, 15:1-35, 28:8-25). நாளாகமப் புத்தகத்தை எழுதியவர், சவுலினுடைய முழு வாழ்வையும் கருத்திற் கொண்டவராக, அவன் தேவனை நம்பி வாழ்கின்ற ஒரு மனிதனாக இருக்கவில்லை என்பதை அறியத்தரும் விதத்தில், அவன் தேவனைத் தேடவில்லை என்று குறிப்பிட்டுள்ளார் (R.Braun, *1Chronicles: Word Biblical Commentary Volume 14*, p. 152). மேலும், தேவனைத் தேடுவதற்கு சாமுவேலின் புத்தகத்தில் உள்ள வார்த்தையை நாளாகமப் புத்தகத்தை எழுதியவர் உபயோகிக்கவில்லை. சவுல் தேவனைத் தேடியுள்ள போதிலும் இதை உண்மையான தேடுதலாகக் கருதமுடியாது என்பதனால், அதாவது அவன் ஏனைய பக்தர்களைப்போல தேவனை முழுமையாக நம்பியவனாகவும், முழு இருதயத்தோடும் தேடுகிறவனாக இராததமையால், நாளாகமப் பத்தகத்தை எழுதியவர் சவுலின் செயல்களை உண்மையாகத் தேவனைத் தேடும் செயல்களாகக் கருதவில்லை. இதனாலேய அவன் தேவனைத் தேடவில்லை என்று குறிப்பிட்டுளளார் (J.W.Haley, *An Examination of the Alleged Discrepancies of the Bible*, pp. 359-360). தேவனைத் தேடிய சவுலின் செயல்கள் ஏனைய மனிதர்களுடைய தைப்போல இராததினால், அவன் மிகவும் நெருக்கடியான சூழ்நிலைகளில் இருந்த சந்தர்ப்பங்களிலும், தேவன் அவனுக்கு எவ்வித பதிலையும் கொடுக்கவில்லை (R.F.Youngblood, *1,2 Samuel: The Expositor's Bible Commentary Volume 3*, pp. 667, 779).


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London, 2006.

மரித்தவர்கள் தற்பொழுது அவரிடமே இருக்கின்றனர் என்பது தெளிவாகின்றது.[14] நீதிமான்களுடைய ஆவிகள் தற்பொழுது தேவன் இருக்கும் இடத்தில் இருப்பதாகவே எபிரேயர் 12:23 கூறுகிறது. எனவே, பரலோகத்திலிருக்கும் மரித்த பரிசுத்தவான்களின் ஆவிகளை அஞ்சனம் பார்க்கும் செயலின் மூலமாகவோ அல்லது வேறு வழிகளிலோ பூமிக்கு கொண்டுவரமுடியாது.

மரித்த பரிசுத்தவான்களின் ஆவிகளைப் பரலோகத்திலிருந்து பூமிக்கு எவராலும் கொண்டு வரமுடியாது என்பதை லாசருவையும் ஐசுவரியவனையும்பற்றிய சரிதை அறியத்தருகின்றது (லூக்.16:19-31).[15] இச்சரிதையில் பரலோகம் என்பதற்கு யூதர்கள் உபயோகித்த இன்னுமொரு பெயரான “ஆபிரகாமின்மடி” என்னும் சொற்பிரயோகம் உள்ளது. ஆபிரகாமின் ஆவி தற்பொழுது பரலோகத்தில் இருப்பதனால், யூதர்கள் தாங்கள் மரணத்தின் பின்னர் ஆபிரகாமின் மடியில் இளைப்பாறச் செல்வதாகக் கருதினார்கள். இதனால், அவர்கள் செல்லும் பரலோகம் “ஆபிரகாமின் மடி” என்றும் அழைக்கப்பட்டது. லாசருவையும் ஐசுவரியவானையும் பற்றிய சரிதையில், மரணத்தின் பின்னர் லாசரு ஆபிரகாமின் மடிக்கும், ஐசுவரியவான் மரித்த துன்மார்க்கரின் ஆவி செல்லும் இடத்திற்கும் சென்றான். தமிழ் வேதாகமத்தில் இதைப் “பாதாளம்” என்று மொழிபெயர்த்துள்ள போதிலும் (லூக்.16:23), மூலமொழியில் “ஹேதீஸ்” என்னும் கிரேக்கச் சொல்லே உள்ளது. இது பரதீசு என்பதற்கு எதிரான, மரித்த துன்மார்க்கர் செல்லும் இடத்தைக் குறிப்பிட யூதர்கள் உபயோகித்த சொல்லாகும். இச்சரிதையில், பாதீசிலிருந்தும், ஹேதீசிலிருந்தும் எவராலும் வெளியே செல்லமுடியாது என்பதை இயேசுகிறிஸ்து திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார் (லூக்.16:26). எனவே, மரித்த பரிசுத்தவான்களின் ஆவிகள் மட்டுமல்ல, துன்மார்க்கரின் ஆவிகளினாலும், தாங்கள் இருக்கும் இடத்திலிருந்து வெளியே வரமுடியாத நிலையிலேயே இருக்கின்றனர். உயிரோடிருப்பவர்களினால் மரித்த ஆவிகளிருக்குமிடத்திற்குச் செல்லமுடியுமே தவிர மரித்தோரால் இவ்வுலகத்திற்கு மறுபடியும் வரமுடியாது (2சாமு.12:23).

---

[14] கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் இன்னும் இயேசுகிறிஸ்துவிடம் செல்வதில்லை என்று சிலர் கருதுகின்றனர். இவர்கள் பரலோகத்தின் இன்னுமொரு பெயரே பரதீசு என்பதை அறியாதவர்களாக, தற்பொழுது பரதீசில் இருக்கும் மரித்தோர், இயேசுகிறிஸ்துவின் மறுவருகையின்போதே பரலோகத்திற்குச் செல்வார்கள் என்று எண்ணுகின்றனர். ஆனால், யூதர்கள் பரலோகத்தையே பரதீசு என்று அழைத்தனர். இதனால்தான், வெளிப்படுத்தல் 2:7ல் பரதீசிலிருக்கும் ஜீவவிருட்சம் வெளிப்படுத்தல் 22:7,14ல் பரலோகத்தில் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. சிலுவையில் மரிக்கும்போது, பரலேகத்திலிருக்கும் பிதாவிடம் தம்முடைய ஆவியை ஒப்படைத்த இயேசுகிறிஸ்து, அருகிலிருந்த கள்ளனிடம் இன்றைக்கு நீ என்னுடனேகூட பரதீசிலிருப்பாய் என்று கூறினார் (லூக்.23:43,46). மேலும், ஒரு சந்தர்ப்பத்தில் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பவுல், தான் பரதீசுக்குச் சென்றதாகக் குறிப்பிட்டுள்ளார் (2கொரி.12:2-3). இது பற்றிய மேலதிக விளக்கத்திற்கு எனது “மரணத்தின் மறுபக்கம்” என்னும் நூலைப் பார்க்கவும்.

[15] இது இயேசுகிறிஸ்துவின் உவமைகளில் ஒன்றாகக் கருதப்படுகின்ற போதிலும், இதில் மனிதனொருவனின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளமையால் (லூக்.16:20) சில வேத ஆராய்ச்சியாளர்கள் இதை உண்மையாக நடைபெற்ற ஒரு சம்பவம் என்றே கூறுகின்றனர். இச்சரிதையில், ஐசுவரியவானுடைய பெயர் குறிப்பிடப்படாமல் அவன் ஒரு மனுஷன் என்று அறிமுகப்படுத்தப்பட்டிருப்பதனால், சிலர் இதை ஒரு உவமை என்றே கருதுகின்றனர். (R.H.Stein, *Luke: The New American Commentary*, p. 422). ஆனால், இச்சரிதையில் ஏனைய நபர்கள் பெயர் குறிப்பிடப்பட்டவர்களாகவும், மரித்த ஆபிரகாமும் ஐசுவரியவானும் பேசுகிறவர்களாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளதனாலும், இதைக் கற்பனையில் உருவான ஒரு உவமைக் கதை என்று கூறமுடியாது. மேலும் “இயேசுகிறிஸ்துவின் பார்வையில் ஐசுவரியவான் ஒன்றுமில்லாதவனாகவும், லாசரு முக்கியமானவனாகவும் இருந்துள்ளனர். இதனாலேயே ஐசுவரியவான் பெயரில்லாதவனாகவும், தரித்திரன் பெயருள்ளவனாகவும் இருக்கின்றான்” (J.B.Green, *Luke: The New International Commentary on the New Testament*, p. 606).


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London, 2006.

மரித்தோரின் ஆவிகளினால் மறுபடியும் இவ்வுலகத்திற்கு வரமுடியாது என்பதனால், அஞ்சனம் பார்க்கிறவர்கள் கொண்டுவரும் ஆவிகள் யாருடையவைகள் என்பதை நாம் அறிந்துகொள்ளவேண்டும். அஞ்சனம் பாக்கும் செயல்கள் பிசாசின் ஆவிகளினால் செய்யப்படுகிறவைகள் என்பதனால், பிசாசின் ஆவிகளே மரித்தவர்களைப் போன்ற தோற்றத்துடன் மக்களை ஏமாற்றி வருகின்றன. பிசாசு ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக் கொண்டு மக்களை வஞ்சித்து வருவதாக வேதாகமம் கூறுவதனாலும் (2கொரி.11:14), அவனுக்கு அற்புதங்கள் செய்யக்கூடிய ஆற்றல் இருப்பதனாலும் (2தெச.2:9, மத்.24:24), பிசாசின் ஆவிகளே பில்லி சூனியம், அஞ்சனம் பார்த்தல் போன்ற செயல்கள் மூலம் மனிதருக்குப் பிழையான வழிநடத்துதல்களையும் ஆலோசனைகளையும் கொடுத்து வருகின்றன. இவ்வுலகில் பிசாசின் ஆவிகள் இருப்பதாக வேதாகமம் கூறுகிறது. இவை வானமண்டலத்திலும் பூமியிலும் மட்டுமல்ல (எபே.6:12), சில சந்தர்ப்பங்களில் மனிதர்களுக்குள்ளும் செல்கின்றன. பிழையான உபதேசங்களினால் மக்களை வஞ்சிக்கிக்கும் இவ்வாவிகள் (1தீமோ.4:1), அஞ்சனம் பார்க்கிறவர்களிடம் மரித்த மனிதர்களின் தோற்றத்தில் வந்து மக்களைப் பிழையான வழியில் செல்லவைக்கின்றது.

கிறிஸ்தவர்களாகிய நாம், மரித்தோரின் ஆவிகளிடத்தில் அல்ல, தேவனிடமிருந்தே நம்முடைய வாழ்க்கைக்குத் தேவையான ஆலோசனைகளையும் வழிநடத்துதலையும் பெற்றுக் கொள்ளவேண்டும். வேதாகம காலத்தில் தேவன் பலவிதமான முறைகளில் மக்களுக்குத் தம்மையும் தம்முடைய வார்த்தையையும் வெளிப்படுத்தி வந்துள்ள போதிலும், அவருடைய வார்த்தையான வேதாகமம் எழுத்துவடிவம் பெற்ற பின்னர், வேதாகமத்தின் மூலமே அவர் மக்களுக்கு அவசியமான ஆலோசனைகளையும் வழிநடத்துதலையும் கொடுத்து வருகின்றார். சில சந்தர்ப்பங்களில் தரிசனங்கள், தீர்க்கதரிசனங்கள், நேரடியாகப் பேசுதல் என்பனவற்றின் மூலம் மனிதருக்குத் தேவனுடைய வழிநடத்துதல் கிடைக்கின்ற போதிலும், இத்தகைய வெளிப்பாடுகள் அனைத்தையும் நாம் வேதாகமத்தின் வெளிச்சத்தில் ஆராய்ந்து பார்க்க வேண்டும். வேதாகமத்தை முரண்படுத்தும் வெளிப்பாடுகளும் செய்திகளும் தேவனிடமிருந்து வருபவைகள் இல்ல. இதனால் இவற்றை நாம் நிராகரித்துவிட வேண்டும் (அப்.17:11, 1தெச.5:20-22, 1யோவா.4:1-3). வானத்திலிருந்து வரும் தூதன்கூட தேவனுடைய வார்த்தையை முரண்படுத்துகிற ஒரு செய்தியைக் கொண்டுவந்தால் அதை நாம் ஏற்றுக்கொள்ளக் கூடாது (கலா.1:8-9).

தேவன் தம் மக்களைத் தம்முடைய வார்த்தையான வேதாகமத்தின் மூலமே வழி நடத்துகிறவராக இருப்பதனால் சங்கீதக்காரன், “உம்முடைய வார்த்தை என் கால்களுக்குத் தீபமும் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது” என்று தெரிவித்துள்ளான் (சங்.119:105). நாம் மரித்தவர்களின் ஆவிகளிடமிருந்து அல்ல, வேதாகமத்திலிருந்தே தேவனுடைய வழிநடத்துதலைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதை ஏசாயா பின்வருமாறு சுட்டிக்காட்டியுள்ளார்:


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London, 2006.

அவர்கள் உங்களை நோக்கி அஞ்சனம் பார்க்கிறவர்களிடத்திலும், முணு முணென்று ஓதுகிற குறிகாரரிடத்திலும், விசாரியுங்கள் என்று சொல்லும்போது, ஜனங்கள் தன் தேவனிடத்தில் விசாரிக்கவேண்டியதல்லவோ? உயிருள்ளவர்க ளுக்காகச் செத்தவர்களிடத்தில் விசாரிக்கலாமோ? வேதத்தையும் சாட்சி ஆகமத்தையும் கவனிக்கவேண்டும். இந்த வார்த்தையின்படியே சொல்லா விட்டால் அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை (ஏசா.8:19-20).

இவ்வசனங்களில் "வேதம்" "சாட்சி ஆகமம்" என்னும் இரு வார்த்தைகளும் தேவனு டைய வார்த்தையான வேதாகமத்தையே குறிக்கின்றன. தேவன் வேதாகமத்தில் தம்மைப் பற்றிய சத்தியத்திற்கு சாட்சியாயிருப்பதனால், அவருடைய வார்த்தையான வேதம் இங்கு சாட்சி ஆகமம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.[16] மேலும், தேவனிடத்தில் விசாரிக்கவேண்டும் என்று 9ம் வசனத்தில் குறிப்பிட்டுள்ள ஏசாயா, இதற்காக வேதத்தையும் சாட்சி ஆகமத்தையும் கவனிக்க வேண்டும் என்று 10ம் வசனத்தில் தெரிவித்துள்ளார். இதிலிருந்து, தேவனிடத்தில் விசாரிப்பது என்பது, அவருடைய வார்த்தையான வேதாகமத்தில் ஆராய்ந்து பார்க்கும் செயலாகவே உள்ளது. எனவே, நாம் மரித்தவர்களின் ஆவிகளிடத்தில் அல்ல, தேவனுடைய வார்த்தையான வேதாகமத்திலேயே அவருடைய ஆலோசனையையும் வழிநடத்துதலையும் பெற்றுக் கொள்ளவேண்டும். மேலும், வேதாகமத்திலிருந்து தேவனுடைய வழிநடத்துதலைப் பெற்றுக்கொள்ளாதவன் வழி தெரியாமல் இருளில் இருப்பதனால், "அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை" என்றும் ஏசாயா குறிப்பிட்டுள்ளார்.[17]

**உசாத்துணை நூல்கள்**


Ackroyd, Peter R. *The First Book of Samuel*. Cambridge: Cambridge University Press, 1971.

Arnold, Bill T. *1 & 2 Samuel: The NIV Application Commentary*. Grand Rapids: Zondervan Publishing House, 2003.

___________. "Necromancy and Cleromancy in 1 and 2 Samuel" in *Catholic Biblical Quarterly*. 66 (2004), pp. 199-213.

Baldwin, Joyce. *1 and 2 Samuel: Tyndale Old Testament Commentary*. Leicester: Inter Varsity Press, 1989.

Bergen, Robert D. *1, 2 Samuel: The New American Commentary*. Nashville: Broadman & Holman Publishers, 1996.

Beuken, W.A.M. "1Samuel 28: The Prophets as Hammer of Witches" in *Journal of the Old Testament Studies*. 6 (1978), pp. 3-17.

Bloch-Smith, B.L. "The Cult of the Dead in Judah: Interpreting the Material Remains" in *Journal of Biblical Literature*. 111 (1992), pp. 213-214.

Brueggemann, W. *First and Second Samuel: Interpretation*. Louisville: Westminster/John Knox press, 1990.

Cox, Patricia. "Origen and the Witch of Endor: Toward an Iconoclastic Typology" in *Anglican Theological Review*. 2 (1984), pp. 139-144.

Crockett, William D. *A Harmony of the Books of Samuel, Kings, and Chronicles*. Grand Rapids: Baker Book House, 1951,

Davis, John J. & Whitcomb, John C. *Israel From Conquest to Exile: A Commentary on Joshua – 2Kings*. Winona Lake: BMH Books, 1970.


---

[16] J.A.Motyer, *The Prophecy of Isaiah*, p. 96.

[17] *G.W.Grogan, Isaiah: The Expositor's Bible Commentary Volume 6, p. 73.*



© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London, 2006.

Driver, S.R. *Notes on the Hebrew Text and the Topography of the Books of Samuel*. Oxford: Clarendon Press, 1913.
Evans, Mary J. *1 and 2 Samuel: New International Biblical Commentary*. Peabody: Hendrickson Publishers, 2000.
Figart, T. "Saul, the Spirits, and Samuel" in *Grace Theological Journal*. 11 (1970), pp. 13-29.
Gordon, Robert P. *1 & 11 Samuel: Library of Biblical Interpretation*. Carlisle: Paternoster Press, 1986.
Haley, J.W. *An Examination of the Alleged Discrepancies of the Bible*, Grand Rapids: Baker, Book House, 1958.
Hertzberg, H.W. *1 and 2 Samuel: Old Testament Library*. Philadelphia: Westminster Press, 1964.
Kirkpatrick, A.F. *The First Book of Samuel*. Cambridge: Cambridge University Press, 1891.
Klein, Ralph W. *1 Samuel: Word Biblical Commentary Volume 10*. Waco: Word Books Publisher, 1983.
Laney, J. Carl. *First and Second Samuel: Everyman's Bible Commentary*. Chicago: Moody Press, 1982.
Lewis, T.J. *Cults of the Dead in Ancient Israel and Ugarit*. Atlanta: Scholars Press, 1989.
McCarter, P.K. *1 Samuel: Anchor Bible Commentary*. New York: Doubleday, 1980.
McKane, William. *1 and 2 Samuel: Torch Bible Commentary*. London: SCM Press, 1963.
Merrill, Eugene H. *1 Samuel: The Bible Knowledge Commentary Old Testament*. Wheaton: Victor Books, 1985.
Motyer, J.A. *The Prophecy of Isaiah*. Leicester: Inter Varsity Press, 1993.
Robinson, Gnana. *1&2 Samuel: International Theological Commentary*, Grand Rapids: Eerdmans Publishing Company, 1993.
Schaff, Philip. ed., *The Books of Samuel: Lange's Commentary*. Grand Rapids: Zondervan, Publishing House, 1960.
Smelik, "The Witch of Endor: 1 Samuel 28 in Rabbinic and Christian Exegesis Till 800 AD" in *Vigiliae Christianae*. 33 (1979), pp. 160-179.
Unger, Merrill F. *Biblical Demonology*. Wheaton: Van Kampen Press, 1952.
Watts, John D.W. *Isaiah 1-33: Word Biblical Commentary Volume 24*. Waco: Word Books Publisher, 1985.
Wiersbe, Warren W. *Be Successful: An Old Testament Study – 1 Samuel*. Colorado Springs: Cook Communications, 2001.
Youngblood, Ronald F. *1, 2 Samuel: The Expository Bible Commentary Volume 3*. Grand Rapids: Zondervan Publishing House, 1992.


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London, 2006.